*10*

# இயேசு சீஷர்களின் பாதங்களைக் கழுவியபோது

## (யோவான் 13:1-17)

*மறுஉருவாக்கமான வாழ்வு என்பது*
*ஊழியத்தின் வாழ்வாக உள்ளது ...*

இயேசு ஒரு அரசராக இருந்தார். நாம் ஒரு அரசரைப் பற்றி நினைக்கும்போது, அரியணையில் வீற்றிருப்பவரை, வெற்றிபெறும் ஒரு சேனையின் முன்னால் ஒரு குதிரையின்மீது பயணம் செய்கிற ஒரு மனிதரை அல்லது தமது கிரீடம் மற்றும் இராஜரீக உடைகள் தரித்து மக்கள் கூட்டத்திற்கு முன்பாக அணிவகுத்துச் செல்லுகையில் அவர்களால் ஆர்ப்பரிப்புடன் வரவேற்கப்படுகிற ஒரு மனிதரைப் பற்றி நினைக்கிறோம்.

ஆனால் யோவான் 13ல் நமது அரசரை மாறுபட்டவராக இருக்கக் காண்கிறோம்: தமது சீஷர்களுக்கு முன்பாக மண்டியிட்டவராக, ஒரு மேல் துண்டைப் போட்டுக்கொண்டு அவர்களின் பாதங்களைக் கழுவுபவராக அவர் காணப்படுகிறார். ஒரு சந்தர்ப்பத்தில் கிரேக்கர்கள், "இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்று கூறினர் (யோவான் 12:21). இங்கு நாம் எந்த வகையான இயேசுவைக் காணமுடிகிறது? ஊழியத்திற்கு உதாரணத்தை அமைத்த ஒருவர்! இந்த நிகழ்ச்சியைப் பற்றி நாம் மூன்று கேள்விகளைக் கேட்போமாக.

### இயேசு இந்த உதாரணத்தை ஏன் கொடுத்தார்?

அந்த கேள்விகளுக்குச் சாத்தியமான இரண்டு சரியான பதில்கள் உள்ளன. ஒன்று பின்வருமாறு உள்ளது: ஊழியம்தான் உண்மையான சீஷத்துவத்தின் அடையாளம் என்பதைப் பன்னிருவர் இன்னும் புரிந்துகொண்டிருக்கவில்லை என்பதால் அவர்களுக்கு இந்தப்பாடம் தேவைப்பட்டது, எனவே இயேசு இதைப் போதித்தார். முந்திய சந்தர்ப்பங்களில், இராஜ்யத்தில் யார் பெரியவராக இருப்பார் என்பது பற்றி அப்போஸ்தலர்கள் விவாதம் செய்திருந்தனர், இயேசு அவர்களிடத்தில், "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்று கூறியிருந்தார். (காண்க மாற்கு 10:35-45; மத்தேயு 20:20-28.) ஆனால் அவர்கள் அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கவில்லை. கடைசி இராப்போஜனத்தின் போதுகூட அவர்கள், தங்களுக்குள் இராஜ்யத்தில் யார் பெரியவராயிருப்பார் என்று கலந்துரையாடிக்கொண்டிருந்தனர். கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பின்பு நடைபெற்றவற்றைப் பற்றி லூக்கா நமக்குக் கூறினார்:

> *அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன் (லூக்கா 22:24-27).*

*சீஷர்களின் பாதங்களைக் கழுவும் நிகழ்ச்சியானது அனேகமாக, யார் பெரியவராயிருப்பார் என்ற விவாதத்தைத் தொடர்ந்து நடந்திருக்க வேண்டும், இத்துடன் இயேசுவின் பின்வரும் வார்த்தைகள் இணைந்திருக்கலாம்: "நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்."*

*அப்போஸ்தலர்கள், இயேசுவுடன் மூன்று ஆண்டுகள் காலம் இருந்த பின்னரும்கூட, இராஜ்யத்தில் யார் பெரியவராயிருப்பார் என்பது பற்றி இயேசு போதித்திருந்தது என்ன என்பதைப் புரிந்துகொண்டிருக்கவில்லை, அல்லது ஊழியம் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதையும் அவர்கள் புரிந்துகொண்டிருக்கவில்லை. அவர்கள் இன்னமும், தங்களுக்குள் முக்கிய மான அப்போஸ்தலராக இருப்பதற்குப் பாத்திரர் யார் என்பது பற்றி விவாதம் செய்துகொண்டிருந்தனர். அனேகமாக அவர்கள் ஒவ்வொருவரும் முதலிடத்திற் கான தமது உரிமைகோருதலுக்கு முன்வைக்கப் பயன்படுத்தக் கூடிய விவாதங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தனர் எனலாம்.*

*மற்றும், இயேசுவின் வாழ்வில் ஒருவகையான உச்சகட்டத்திற்கு அவர்கள் வந்துகொண்டு இருந்ததை அவர்கள் உணர்ந்து அறிந்தனர். இயேசு, தாம் மரிக்கப்போகிறேன் என்று அவர்களிடத்தில் கூறியிருந்தார்; அதிகாரம் மற்றும் கனம் பற்றிய இந்த விஷயத்தை மிகவும் தாமதமாகிவிடுவதற்கு முன்னர் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் நம்பியிருக்கலாம்.*

*இப்போது அவர்கள் ஒரு முக்கியமான உணவை உண்பதற்கு ஒன்றுகூடி வந்திருந்தனர். அதற்கு விசேஷித்த ஆயத்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அங்கு வேலைக்காரர்கள் யாரும் இல்லை. வழக்கமாக ஒரு வேலைக்காரன் தான், இரவு உணவின்போது விருந்தினர்களின் பாதங்களைக் கழுவி விடுவான் அல்லது விருந்தினர் சொந்தப் பாதங்களைக் கழுவிக்கொள்வதற்குத் தண்ணீர் அளிப்பான். இதை அப்போஸ்தலர்கள் கவனித்திருந்தனர்; அவர்கள் தங்கள் பாதங்கள் கழுவப்படக் கூடுவதற்கு ஏதேனும் செய்யப்பட வேண்டும் என்று உணர்ந்து அறிந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் அது ஒரு வேலைக்காரனின் வேலையாக இருந்தது! அவர்களில் எவரேனும் அந்த வேலையைச் செய்வதற்குப் பணிந்திருந்தால், அவர் முதலிடத்திற்கான தமது உரிமைகோருதலைத் துறப்பவராயிருப்பார். எவரொருவரும் அந்த அளவுக்குத் தம்மைத் தாழ்த்திக்கொள்ள, முதல் நபராக இருப்பதற்கான தமது பேராவலை விட்டுக்கொடுத்துவிட மனவிருப்பம் கொண்டிருக்கவில்லை. ஆகையால் அந்தப்பணிப்பொறுப்பு செய்யப்படாமலே விடப்பட்டிருந்தது. மற்ற வர்களின் பாதங்களைக் கழுவுதல் என்பது அவர்களது மதிப்பீட்டில், தாழ்ந்த*

இடத்தை ஒப்புக்கொள்வதாக இருந்திருக்கும். இதைப் போன்று பாடம் ஒன்று அப்போஸ்தலர்களுக்குத் தேவைப்பட்டது!

ஆனால் "ஏன்?" என்ற கேள்விக்கு இன்னொரு பதில் உள்ளது. சீஷர்களுக்குத் தேவை என்பதால் மாத்திரமல்ல, ஆனால் அவர்களை இயேசு அன்புகூர்ந் திருந்ததாலும், அவர்களுக்கு அவர் இந்த உதாரணத்தைக் கொடுத்தார். இதைப்பற்றிய விபரம் பின்வருவது போன்று அறிமுகப்படுத்தப்படுகிறது:

> பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார் (யோவான் 13:1).

இயேசு, தமது முடிவு நெருங்கியிருந்த காரணத்தினாலும் இந்த உதாரணத்தைக் கொடுத்தார். யோவான் பின்வருமாறு கூறுகிறார்:

> சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்; தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்தி லிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, (யோவான் 13:2-4).

இப்படிப்பட்ட ஒரு வேளையில், இயேசு தமது சீஷர்களுக்கு விட்டுச் செல் லுகிற எந்தச் செய்தியும், அது வார்த்தையாக இருந்தாலும் அல்லது கிரியையாக இருந்தாலும், மிகவும் முக்கியமானது என்று நினைக்கப்பட வேண்டியதாக இருந்துள்ளது.

இயேசு மரிக்க இருந்தார் என்பதால், மற்றும் அவர் தமது சீஷர்கள்மீது அன்புகூர்ந்தார் என்பதால், அவர்களை விட்டு அவர் செல்வதற்கு முன்னர், மிகவும் முக்கியமான பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்களுடைய பாதங்களை அவர் கழுவிய போது, அந்தப் பாடத்தை அவர்களுக்கு அவர் போதித்தார்.

## அந்த உதாரணம் சீஷர்களிடத்தில் கேட்டுக்கொண்டது என்ன?

நாம், யோவான் 13:3-17ஐ வாசிப்பதன் மூலம் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கத் தொடங்குவோமாக.

சீஷர்கள் தமது உதாரணத்தைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று இயேசு நான்கு முறை கூறுகிறார்: "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (வசனம் 14); "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி" (வசனம் 15); "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல"

(வசனம் 16). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் "நான் ஊழியம் செய்ய வேண்டி இருக்கிறது என்றால், நீங்கள் ஊழியம் செய்யப் பணிவதற்கு எவ்வளவு மனவிருப்பமாக இருக்க வேண்டும்?" என்று கூறினார். "இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (வசனம் 17).

ஆனால் அவர்கள் இந்த உதாரணத்தை எவ்வாறு பின்பற்ற வேண்டியிருந்தது? இயேசு "சீஷர்களின் பாதங்களைக் கழுவியது" அவர்களுக்கு எவ்வாறு ஒரு உதாரணத்தை அமைத்தது?

சபையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு சடங்காச்சாரத்தின் உதாரணத்தை இயேசு அமைத்தார் என்று சிலர் நம்புகின்றனர். இன்றைய நாட்களிலும்கூட சில சபைகள், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் "பாதங்களைக் கழுவுதல்" என்பதை தங்கள் ஆராதனை ஊழியத்தின் ஒரு பாகமாக நடைமுறைப் படுத்துகின்றனர்.

ஆனால் இயேசுவின் உதாரணமானது மதரீதியான சடங்காச்சாரம் எதனுடனும் சம்பந்தப்பட்டதில்ல. பாதங்களைக் கழுவுதல் என்பது அந்தக் காலத்தில் இல்லங்களில் வழக்கமாக நடைபெறும் நிகழ்வாக இருந்தது, இது மக்கள், தூசிபடிந்த சாலையில் நடந்து பயணம் செய்தனர் என்ற உண்மையினாலும், அவர்கள் தங்கள் பாதங்கள் அழுக்காவதில் இருந்து காத்துக்கொள்ளாத பாத அணிகளை அணிந்திருந்தனர் என்ற உண்மையினாலும் அவசியப்படுத்தப்பட்டது. ஒரு பயணத்திற்குப் பின்பு நீங்கள் ஒரு வீட்டிற்குள் நுழையும்போது, உங்கள் பாதங்களைக் கழுவ வாய்ப்புக் கொண்டிருந்தால் அல்லது நீங்கள் அமர்ந்திருக்க (அல்லது சாய்ந்திருக்க) ஒரு வேலைக்காரன் உங்கள் பாதங்களைக் கழுவினான் என்றால், அது புத்துணர்வு ஊட்டுவதாக இருக்கும். இதற்கு நேர்மாறாக, அந்த வாய்ப்பைப் பெற்றிராத நிலையானது உங்களின் பயணம் முழுவதிலும் உங்களை வசதியற்ற நிலையில் இருப்பதாக உணர விட்டுவிடும்.

"இயேசு தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவியது ஏன்?" என்ற கேள்விக்கு, "ஏனென்றால் அவர்களின் பாதங்கள் அழுக்காக இருந்தன!" அவைகள் கழுவப்பட வேண்டியது அவசியமாயிருந்தது என்று கூறுவதால் பதில் அளித்தல் என்பது ஒரு வழியாக இருக்கலாம்.

இவ்வாறாக, பாதங்களைக் கழுவுதல் என்பது வேதாகமத்தில் எப்போதுமே ஊழியம், உபசரிப்பு மற்றும் நற்செயல்கள் என்பவற்றின் சந்தர்ப்பப் பொருளிலேயே வைக்கப்பட்டுள்ளது. மம்ரேயின் சமபூமியில் மரத்திற்கு அடியில் ஆபிரகாம் மூன்று மனிதர்களுக்கு உபசரிப்புச் செய்தபோது, அவர்களின் பாதங்களை அவர் கழுவச் செய்தார் (ஆதியாகமம் 18:4). லோத்து, கர்த்தருடைய செய்தியாளர்ளை, சோதோமில் இருந்த தமது வீட்டிற்குள் வரவேற்றபோது, அவர் "... அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, ..." என்று கூறினார் (ஆதியாகமம் 19:2). ஆபிரகாமுடைய வேலைக்காரனை லாபான் தனது வீட்டிற்குள் வரவேற்றபோது, அவர் "... அவனும், அவனோடே வந்தவர்களும் தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொடுத்தான்" மற்றும் அவர்கள் தங்கள் கால்களைக் கழுவினர் (ஆதியாகமம் 24:32). யோசேப்பின் சகோதரர்கள் இரண்டாவது முறையாக எகிப்துக்கு வந்தபோது, யோசேப்பு, "அவர்கள் தங்கள் கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்தார்" (ஆதியாகமம் 43:24). கிபியா என்ற இடத்தில் இருந்த முதிர்வயதான ஒரு மனிதர், இரு அந்நி-

யர்களைத் தனது வீட்டிற்கு அழைத்து வந்ததன்மூலம் அவர்களுக்கு உபசரிப்புச் செய்தார்: பதிவேடு, “அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொண்டு, புசித்துக் குடித்தார்கள்” என்று கூறுகிறது (நியாயாதிபதிகள் 19:21). தாவீது அபிகா-யிலைத் தனது மனைவியாகும்படி கேட்டு ஆளனுப்பியபோது, அவள் “இதோ, நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்” என்று கூறியதன் மூலம், சேவிப்பதற்கான தனது மனவிருப்பத்தைக் காண்பித்தாள் (1 சாமுவேல் 25:41). இயேசு ஒரு பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்திருந்தபோது, அவர் “நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, ...” என்று கூறினார் (லூக்கா 7:44). எவ்வகையான விதவைகள் சேர்க்கப்பட வேண்டும் என்று பவுல் குறிப்பிட்டபோது, அவர் “பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக்கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, ...” என்று கூறுகிறார் (1 தீமோத்தேயு 5:10).

ஆகையால், பாதங்களைக் கழுவுதல் என்பது உபசரிப்பு மற்றும் ஊழியம் ஆகியவற்றைக் குறிக்கிறதே அன்றி, அது ஆராதனை அல்லது மதச்சடங்கு என்பதாக இருப்பதில்லை. இங்கு இயேசு, சபையின் ஆராதனையில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு உதாரணத்தை அமைக்கவில்லை.

பின்பு இயேசு தமது உதாரணத்தைத் தமது சீஷர்கள் எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்று நோக்கங்கொண்டார்? அவர் பேதுருவினிடத்தில், “நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்” என்று கூறினார். இந்த நிகழ்வில் இருந்து பேதுருவும் மற்றவர்களும் பிற்பாடு புரிந்துகொள்ள வேண்டியது என்னவாக இருந்தது?

முதலாவது, அவர்கள் ஊழியக்காரர்களைப் போல செயல்படவேண்டும் என்பதை இயேசு நோக்கங்கொண்டிருந்தார் என்று அவருடைய சீஷர்கள் புரிந்து கொண்டிருந்திருப்பார்கள். பாதங்கள் வழக்கமாக ஒரு ஊழியக்காரனாலேயே கழுவப்படும். இயேசு ஒரு ஊழியக்காரனுடைய நிலைக்குத் தாழ்த்தினார். (காண்க பிலிப்பியர் 2:4-7.) இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்: இவ்வுலகத்தை சிருஷ்டித்தவர், மனுக்குலத்தின் இரட்சகர், இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா, சீஷர்களின் எஜமானரும் போதகருமாகிய கர்த்தர், தாழ்வான ஊழியக்காரனைப் போல் தம்முடைய மேட்டிமையான சீஷர்கள் முன்பாகப் பணிந்து கொண்டிருக்கிறார்.

இரண்டாவது, அவர்களின் ஊழியமானது குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று இயேசு நோக்கங்கொண்டிருந்தார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். *அவசியமாக இருந்ததை இயேசு செய்தார்.* சீஷர்களின் பாதங்கள் அழுக்காயிருந்தன; அவற்றை அவர் கழுவினார். அவர் அந்த வேளையின் தேவையைச் சந்தித்தார். அந்தத் தேவையைச் சந்திப்பதற்கு *இயேசு, தாழ்வான, மிகவும் அழுக்கான வகையிலான வேலையைச் செய்ய மனவிருப்பமாக இருந்தார்.* பாதங்களைக் கழுவுதலின் பணிப்பொறுப்பைக் காட்டிலும் மனதிற்குக் குறைவாகப் பிடிக்கும் பல வேலைகளைப் பற்றி என்னால் நினைத்துப் பார்க்க முடிவதில்லை. *இயேசு தம்மைவிட்டு விரைவில் ஓடிப்போக இருந்தவர்களுக்குக்கூடப் பணிவிடை செய்தார்.* அவர் தமது சீஷர்கள் ஒவ்வொருவருடைய பாதங்களையும்

*கழுவுதலை வலியுறுத்தினார். அது விரைவில் அவரை மறுதலிக்கவிருந்த பேதுருவை உள்ளடக்கியது. அது விரைவில் அவரைக் காட்டிக்கொடுத்து அவரது மரணத்திற்கு வழிவகுக்க இருந்த யூதாஸையும் உள்ளடக்கியது. அது "அவரை விட்டு ஓடிப்போக" இருந்த மற்ற சீஷர்களையும் உள்ளடக்கியது (மாற்கு 14:50).*

*மூன்றாவது, அவர்கள் - நிறைவாக - தேவனுடைய இராஜ்யத்தில் பெரியவராக இருத்தலுக்கான வழியானது தாழ்மை மற்றும் ஊழியத்தின் வழி யாக இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்திருப்பார்கள். அனேக மாக, பெரியவராயிருத்தல் என்பது பற்றிய அவர்களின் கண்ணோக்கு, பூமிக்குரிய இராஜ்யம் ஒன்றை இயேசு நிலைநாட்டப்போகிறார் என்ற அவர்களின் எதிர் பார்ப்பினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒரு பூமிக்குரிய இராஜ்யத்தில், "புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்" ஆனால் இயேசு பின்வருமாறும் கூடுதலாகக் கூறினார்: "உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் ... தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்" (லூக்கா 22:25, 26). மாற்கு பின்வருமாறு எழுதுகிறார்:*

> *அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதி காரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகு மாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்கு 10:42-45).*

*கிறிஸ்தவத்தின் மேல்நோக்கிய வழியானது கீழ்நோக்கி தலைகீழாக உள்ளது! தம்மையே தாழ்த்தவும் ஊழியக்காரனாகவும் இருக்க மனவிருப்பமா யிருக்கிறவர் எவரோ, அவரே தேவனுடைய இராஜ்யத்தில் மிகப்பெரியவராக எண்ணப்படுவார்.*

*மனிதருடைய வழக்கப்படி பேசுதல் பின்வருமாறு உள்ளது: நமது காலத்தில் கர்த்தருடைய சபையில் பெரியவராக இருப்பது யார் என்பதைப் பரலோகத்தில் தேவன் அடையாளம் கண்டுகொள்வார் என்றால், அந்த நபர் யாராக இருப்பார்? ஆயிரக்கணக்கானவர்களை ஞானஸ்நானப்படுத்திய மாபெரும் பிரசங்கியாராக இருத்தல் என்பது இருக்குமா? சத்தியத்தைப் போதிக்கும் டஜன் கணக்கான புத்தகங்களை எழுதிய மாபெரும் எழுத்தாளராக இருக்குமா? தொலைக்காட்சி அல்லது வானொலியில் பிரசங்கிப்பவராக இருக்குமா? பட்டி மன்றப் பேச்சாளராக இருக்குமா? அற்புதமான பாடல்களில் வழிநடத்துபவராக இருத்தல் என்பது அவசியமாயிருக்குமா? ஒருவேளை சகோதரத்துவத்தில் மிகப்பெரிய சபையொன்றின் மூப்பர்களில் ஒருவராக இருக்குமா? சகோதரத்துவ வெளியீடுகளில் மிகவும் அடிக்கடி தலைப்புச் செய்திகளை ஏற்படுத்துபவராக*

இருக்குமா? கர்த்தர் இராஜ்யத்தில் "பெரியவராக" இருப்பதாக அறிவிப்பது யாரை? இவற்றில் எதுவுமாக இருப்பதற்கு மாறாக, தனது அயலகத்திலும் தான் ஆராதிக்கிற சபையிலும் தவிர வேறு எவரும் கேள்விப்பட்டிராத ஒரு விதவையாக இருக்கலாம். ஆனால் அவள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்காக வாழ்கிறாள் என்பதை கர்த்தர் அறிகின்றனார், அவர்கள்: அவளது குடும்பம், அவளது நண்பர்கள், கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகள் மற்றும் உள்ளூர் சபையும் உலகமுழுவதுமான சபையும் அறிகின்றனர். அவள் நற்கிரியைகளில் ஐசுவரியமுள்ளவளாக இருக்கிறாள் மற்றும் பிறருக்கு ஊழியம் செய்வதினால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யத் தன்னை அர்ப்பணித்திருக்கிறாள்.

இயேசுவின் உதாரணமானது, அவரது சீஷர்கள் ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும் என்றும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதினால் மாத்திரமே அவர்கள் பரலோக இராஜ்யத்தில் பெரியவர்களாக எண்ணப்பட முடியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

## இயேசுவின் உதாரணம் நம்மிடத்தில் கேட்டுக்கொள்வது என்ன?

அடிப்படையில், கர்த்தர் தமது அப்போஸ்தலர்களிடத்தில் கேட்டுக்கொண்டது என்னவோ, அதையே அவர் நம்மிடத்திலும் கேட்டுக்கொள்கிறார். உங்களை அப்போஸ்தலர்களின் இடத்தில் வைத்துப் பாருங்கள்; அவர்களிடத்தில் இயேசு எதைக் கூறினாரோ அதை உங்களிடத்திலும் கூறுகிறார்: "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். ... இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." நாமும்கூடப் பின்வரும் உதாரணங்களினால் இயேசுவைப் பின்பற்ற வேண்டும்: மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல், மற்றவர்களுக்குத் தேவையான எல்லா வழிகளிலும் அவர்களுக்கு ஊழியம் செய்தல் மற்றும் ஊழியம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிற எல்லா வழிகளிலும் ஊழியம் செய்தல், தேவனுடைய இராஜ்யத்தில் பெரியவராக இருத்தல் என்பது உலகத்தில் அவிசுவாசிகளால் செயல்படுத்தப்படுகிற அதிகாரத்தின் வகையில் அல்ல ஆனால் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதன் மூலமாகவே வருகிறது என்பதை உணர்ந்து அறிதல்.

இயேசுவின் உதாரணத்தை நாம் எவ்வாறு பின்பற்றலாம்? நாம் ஊழியம் செய்ய நோக்கங்கொண்டிருந்தால் நாம் என்ன செய்யலாம்? ஒரு விஷயத்தில் நாம், அற்பமான பணிப்பொறுப்புகளை, அழுக்கான வேலைகளைச் செய்ய மனவிருப்பமாக இருப்போம். நாம் மற்றவர்களுக்கு, மனமேட்டிமை உள்ளவர்களுக்குக்கூட நமது விரோதிகளாக இருப்பவர்களுக்குக்கூட நம்மை ஏமாற்றிய நண்பர்களுக்குக்கூட நன்மை செய்ய மனவிருப்பமாக இருப்போம். நாம் நம்மையே தாழ்த்த, நம்மைத் தாழ்ந்தவர்களாகத் தோன்றச் செய்யக்கூடிய ஒரு நிலைப்பாட்டில் ஊழியம் செய்ய மனவிருப்பமாக இருப்போம். மற்றும் தேவைப்பட்டால் நாம் அமைதியாக, ஆர்ப்பாட்டம் இன்றி, மற்றவர்கள் உணர்ந்து அறிதல் இன்றி நாம் ஊழியம் செய்வோம். நாம் கிறிஸ்தவர்களாக

இருப்பதால் மாத்திரம் மற்றும் ஊழியம் செய்வதில் கிறிஸ்தவர் தமது மீட்பரைப் பின்பற்றுதல் இயல்பு என்பதால் மாத்திரம், நாம் சபைக்கு உதவுபவர்களாக, சகோதரர்களுக்கு உதவுபவர்களாக, மற்றவர்களுக்கு உதவுபவர்களாக இருப்போம்.

மிகச்சரியாக அதைப்போன்றே ஊழியம் செய்கிற மக்களுக்காகத் தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்வையாளர்கள் ஒருக்காலும் காணாத அல்லது அறியாதபோதிலும் அவர்கள் ஊழியம் செய்கின்றனர். சிலர் சபைக்கு வராத உறுப்பினர்களை சந்தித்து அவர்கள் தவறியிருப்பதாக அவர்களிடம் கூறுகின்றனர். சிலர் சபைக்குச் செயலகப் பணிகளை செய்கின்றனர். சிலர் சபைக் கட்டிடத்தைச் சுத்தம் செய்கின்றனர் அல்லது பாடல் புத்தகங்களை அவற்றின் இடத்தில் வைப்பதற்காகச் சேகரிக்கின்றனர். சிலர் கட்டிடத்தின் வெளிப்புறப் பராமரிப்பு பணியைச் செய்கின்றனர். சிலர் சபை அறிக்கை இதழை வெளியிடும் பணியை ஒன்றுகூடி மேற்கொள்கின்றனர். சபையின் நடத்துனர்களில் சிலர் மற்றவர்களைச் சந்திப்பதில் பல மணி நேரங்கள் செலவிட்டு சபையின் ஊழியம்பற்றிக் கலந்துரையாடுகின்றனர். சிலர் வேதாகமப் பள்ளித் திட்டங்களை இயக்குதல் அல்லது போதித்தல் மூலமாக ஊழியம் செய்கின்றனர். சிலர் கர்த்தருடைய பந்தியைத் தயார் செய்கின்றனர். சிலர் அனாதைகளுக்குத் தேவையானவற்றை ஏதாவது ஒருவகையில் அளிக்கின்றனர். சிலர் குழந்தைகளுக்கான பள்ளியைப் பராமரிக்கின்றனர். சிலர் தேவைப்பட்டவர்களுக்கு அல்லது சவ அடக்கங்களின்போது உணவு கொண்டுவருகின்றனர். சிலர் வியாதிப்பட்டவர்களுக்கு உணவு கொண்டு வருகின்றனர் அல்லது அவர்களைப் பராமரிக்கின்றனர். அல்லது சிலர் வியாதிப்பட்டவர்களையும் உறவினர்களை இழந்து தவிப்பவர்களையும் சென்று பார்த்து ஆறுதல் கூறுகின்றனர். சிலர் மற்றவர்களுக்குப் போதிப்பதற்காகவும் விசுவாசத்தில் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் அல்லது கர்த்தருக்குள் அவர்களை மாற்றுவதற்காகவும் அவர்களைத் தங்கள் இல்லங்களுக்குள் அழைக்கின்றனர். சிலர் மற்றவர்களைக் கவனித்து அவர்களின் தேவைகளைச் சந்திக்க முயற்சிசெய்கின்றனர் அல்லது அவர்களிடம் இரக்கத்துடன் பேசுவதால் அவர்களை ஊக்குவிப்பதைக் கருத்தாகக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் உதாரணங்களை நான் உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்: நீங்களும் சென்று அதே போலச் செய்யுங்கள்.

## முடிவுரை

ஊழியத்தில் பெரியவராயிருப்பதற்கான பணியானது ஊழியமே என்பதை ஒவ்வொரு நபரும் புரிந்து உணர்ந்துகொண்டால் சபையிலும் உலகத்திலும் உள்ள பெரிய பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட முடியும். பெரிய பிரச்சனைகள் என்பவை ஏறக்குறைய எப்போதுமே பின்வரும் கேள்விகள் தொடர்பாகவே எழுகின்றன: யார் "பெரியவர்" என்று அறியப்படப்போகிறார்? யார் பொறுப்பாளியாக இருக்கப் போகிறார்? யார் நன்மதிப்பை, அங்கீகாரத்தைப் பெறப்போகிறார்? இவ்வழிகளில் உலகத்தாரைப் போல் இருப்பதற்கான சோதனையை நம்மால் எதிர்த்து நிற்க முடிந்தால், சச்சரவுகள் எழுவதற்கு முன்பாகவே அவைகள் தீர்க்கப்படும்.

கிறிஸ்தவத்தின் அடையாளம் என்னவாக இருக்க வேண்டும்? மேலாளா?

*சிலுவையா? கிரீடமா? மேல்துண்டு பற்றிய விஷயம் என்ன? நமது மீட்பர் மண் டியிட்டு, சீஷர்களின் பாதங்களைக் கழுவியதை நாம் பார்த்த பின்பு, நமது மேல்துண்டை நாம் கட்டிக்கொண்டு, ஒருவர் மற்றவருக்கும் மனிதகுலம் முழுவதற்கும் ஊழியம் செய்யவேண்டும் என்று நான் கருத்துத் தெரிவிக்கிறேன். இயேசு தமது மேல்துண்டைப் போட்டுக்கொண்டு உங்கள் பாதங்களைக் கழுவ மனவிருப்பம் கொண்டார் என்றால், இயேசு தமது சீஷர்களுக்கு ஊழியம் செய்தது போலவே, நீங்கள் உங்கள் மேல்துண்டைப் போட்டுக்கொண்டு மற்ற வர்களுக்கு ஊழியம் செய்யாதிருக்கும்படி ஏன் மனமேட்டிமையுடன் இருக்க வேண்டும்?*

*நீங்கள் ஊழியம் செய்ய மனவிருப்பமாக இருக்கிறீர்களா? கிறிஸ்துவின் சீஷராகுங்கள், அவரது சபையில் மற்றும் அவரது சபையின் மூலமாக மற்ற வர்களுக்கு ஊழியம் செய்யுங்கள்.*